குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.112/2020

அ.சா.3

2024–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.35 மணி,

Accused Gnanasekaran absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.T.Ranganathan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பொம்மியம்பட்டியில் குடியிருந்து கொண்டு, லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு, நான் ஒரு துக்க நிகழ்விற்காக சேலம் சென்றுவிட்டு, சேலம் – மேட்டூர் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தேன். பாரப்பட்டி சிந்தாமணியூர் பேருந்து நிறுத்தம் தாண்டி, தடம் எண் ஓ–4 அரசுப்பேருந்து நின்று கொண்டிருந்தது. மேற்படி பேருந்தின் ஓட்டுநர் எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் அங்கு நின்று பார்த்தேன்.

2. அப்போது போலிசார் மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**3.** அ.சா.1 எனது பெரியப்பா என்றால் சரி. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. சம்பவ இடம் சிந்தாமணியூர், பாரப்பட்டி பேருந்து

நிறுத்தத்திற்கு அருகில் என்றால் சரி. மேற்படி சம்பவ இடத்திற்கு சென்றபோது, விபத்து ஏற்படுத்தியாக சொல்லப்படும் பேருந்து அங்கேயே நின்று கொண்டிருந்தது என்றால் சரி. மேற்படி பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் இல்லை. பொதுமக்கள் சுமார் 30 – 40 பேர் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்தபோது, தான் போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரி.

4. நான் கையெழுத்திட்ட தாளில் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. என்னிடம் கையெழுத்து வாங்கியபோது, காலை 11.00 மணிமுதல் மதியம் 03.00 மணி வரை இருந்தார்கள். சம்பவத்தின்போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை என்றால் சரி. மேற்படி, ஓட்டுநர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நான் தொளசம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்களில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.08 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.